**செய்தி வெளியீடு எண்: 458** **நாள்: 16.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (16.7.2018) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், முகலிவாக்கம் – சந்தோஷ் நகரின் ராமச்சந்திரன் தெருவில் 85 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 102 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 13 பூங்காக்கள், 2 மேம்படுத்தப்பட்ட சிறுவர் விளையாட்டு மைதானங்கள், வார்டு மற்றும் பகுதி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 2 பாதாள சாக்கடை திட்டங்கள் ஆகியவற்றை துவக்கி வைத்தார்கள்.

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய இன்றியமையாத பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், முகலிவாக்கம் – சந்தோஷ் நகரின் ராமச்சந்திரன் தெருவில் 85 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் திருவொற்றியூர் மண்டலத்திற்குட்பட்ட எண்ணூர் – சுனாமி குடியிருப்பு AIR நகர் மற்றும் பாலகிருஷ்ணா நகர் (கண்ணாடி தொழிற்சாலை) ஆகிய இடங்களில் 84 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 2 பூங்காக்கள்;

மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட புழல் – வெஜிடேரியன் வில்லேஜ், கங்காதரன் தெரு, புத்தகரம் – சூரப்பட்டு, கதிர்வேடு – பத்மாவதி நகர் சர்வீஸ் சாலை – பிர்லா அவென்யூ அருகில், கதிர்வேடு – பத்மாவதி நகர் 7வது தெரு, பொன்னியம்மன் மேடு –

தணிகாசலம் நகர், ஆகிய இடங்களில் 2 கோடியே 72 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 6 பூங்காக்கள்;

அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட முகப்பேர் திருமங்கலம் பிரதான சாலை, வி.ஜி.பி. நகர் (வருண் அபார்ட்மெண்ட்ஸ் அருகில்), வீரமாமுனிவர் தெரு (எம்.ஜி.ஆர். ஆதர்ஷ் பள்ளி எதிரில்) ஆகிய இடங்களில் 1 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 3 பூங்காக்கள்;

ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட முகலிவாக்கம் – அன்னை வேளாங்கன்னி நகர் பேஸ்–2, சோழிங்கநல்லூர் – ராஜீவ் காந்தி சாலை (டாலர் பில்டிங் அருகில்) ஆகிய இடங்களில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 2 பூங்காக்கள்;

அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட டி.வி.எஸ். காலனி 45வது தெரு மற்றும் ஆபீசர்ஸ் காலனி ஆகிய இடங்களில் 51 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட சிறுவர் விளையாட்டு மைதானங்கள்; பாடி புதுநகர் பிரதான சாலையில் 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வார்டு அலுவலகக் கட்டடம் மற்றும் பாடி குப்பம் பிரதான சாலையில் 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வார்டு மற்றும் பகுதி அலுவலகக் கட்டடங்கள்;

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட சூரப்பட்டு பகுதியில் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை திட்டம்; புத்தகரம் மற்றும் கதிர்வேடு ஆகிய பகுதிகளில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடை திட்டம்;

என மொத்தம் 103 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை பெருநகர்

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 16.7.2018**